சார்பு நீதிமன்றம், பெருந்துறை

**OS.NO.**65/2014

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06ம் நாள் **Dw**2 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் : 06.04.2026

**Dw**2 (பரமசிவம்)

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்)**

பிசாஆ 7 கிரயத்தை நான் ரங்கசாமி மற்றும் விஸ்வநாதன் ஆகியோரிடம் பெற்றேன். அதில் கிரயம் கொடுத்தவர்களின் சொத்து பரம்பரை சொத்து என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரங்கசாமிக்கு 2 முதல் 4 பிரதிவாதிகள் மற்றும் வாதி வாரிசுகள் என்றால் சரிதான். நான் கிரயம் பெற்ற காலத்தில் வாதி சாமியாத்தாளுக்கு திருமணம் ஆகாமல் வீட்டில் இருந்தார் என்றால் அது பற்றி தெரியாது. ரங்கசாமி கவுண்டரின் வேறு பாக பூமியும், எனது நிலமும் அருகருகே இருந்ததால் கிரயம் பெற்றேன். பரம்பரை சொத்து என்பதால் தான் மகன் விஸ்வநாதன் கிரயத்தில் தரப்பினர் என்றால் சரியல்ல. வாதி திருமணமாகாமல் வீட்டில் இருந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. வாதிக்கு தாவா சொத்தில் பாகம் உள்ளதை தெரிந்து தான் கிரயம் பெற்றேன் என்றால் சரியல்ல. நான் பெற்ற கிரயம் வாதிக்கு தாவா சொத்தில் உள்ள பாகத்தை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. கிரய பத்திரத்தில் சாட்சி சுப்பிரமணி என்பவர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார். ரங்கசாமி மேற்படி சாட்சி சுப்பிரமணியிடம் குடிபோதை செலவிற்காக பணம் வாங்குவார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிரயத் தொகையின் ஒரு பகுதியை சாட்சி சுப்பிரமணிக்கு நான் கொடுத்தேன் என்றால் சரியல்ல. ரங்கசாமி கவுண்டர் யாரிடம் கடன் பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் தாவா சொத்தை வில்லங்கத்திற்கு தான் கிரயம பெற்றேன் என்றும் நல்லெண்ண கிரய தாரர் இல்லை என்றால் சரியல்ல. நான் பரம்பரை சொத்தை கிரயம் பெற்றதால் வாதிக்கு தாவா சொத்தில் பாகம் உள்ளது என்றும் நான் வாதிக்கு அவரது பாகத்தை கொடுக்க

கடமைபட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி தான் கிரயச் சொத்தின் 1/5 பாகத்தை கூட்டாக அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.04.06 17:02:35 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS